அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண். 149 / 2017

தேதி. 01.12.2017

# மிலாடி நபி வாழ்த்து

அன்பு வழியிலும், அறவழியிலும் மனித குலம் நடைபோட வேண்டும் என்பதற்காக, தம் வாழ்நாளை அர்ப்பணித்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவதாரத் திருநாளை, உலகெங்கும் உள்ள இஸ்லாமிய பெருமக்கள் போற்றி மகிழ்கின்றனர்.

மனிதநேயம், சகோதர உணர்வு, சமத்துவம் கருணை, கொடை உள்ளம் ஆகிய நற்பண்புகள் எல்லோருடைய உள்ளங்களிலும் மலர்ந்து இவ்வுலகம் அமைதியின் நிலைக்களனாய் விளங்கிட அண்ணல் நபிகளாரின் சீரிய கொள்கைகளைக் கடைப்பிடித்திட உறுதி ஏற்போம்.

மதச்சார்பின்மை என்னும் மகத்துவக் கொள்கை கொண்ட நமது தேசத்திற்கு நபிகள் நாயகம் போதித்த சகிப்புத்தன்மை மிகவும் அவசியம். அந்த வகையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவதாரத் திருநாளாம் மிலாடி நபி நன்னாளைக் கொண்டாடும் அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கும் என் அன்புகலந்த நல்வாழ்த்துகளை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com